
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1058

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

94




**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## இன இழிவை நீக்க வழி தேடுவோம்!

கோவை மாவட்ட திராவிடர் கழக மாநாடு 16.06.1946-இல் ஈரோடு காஸ்மா பாலிட்டன் கிளப்புக்கு அருகில் இருந்த வழக்கறிஞர் அண்ணாமலை என்பவருக்குச் சொந்தமான காலியிடத்தில் அமைக்கப் பட்டிருந்த 'நாகம்மையார் பந்தலில்' நடைபெற்றது. மாநாட்டுக்கு கரூர், சேலம், திருச்சி, திருப்பூர், உடுமலை, தாராபுரம், ஆனைமலை, பொள்ளாச்சி பவானி, குமார பாளையம், கோபி, சத்தியமங்கலம், கணியூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து பலரும் வந்திருந்தனர்.

காலை 9 மணிக்கு பட்டக்காரர் பங்களாவில் இருந்து தொடங்கிய ஊர்வலம் முக்கிய வீதிகளின் வழியாக, 10.30 மணிக்கு மாநாட்டுப் பந்தலை அடைந்தது. ஊர்வலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கருஞ்சட்டைத் தொண்டர்களும், சுமார் 2,000 பொதுமக்களும் கலந்து கொண்டனர். மாநாட்டுப் பந்தலில் ஏற்கெனவே 5,000 பேர்களுக்கு மேல் கூடியிருந்தனர். பெத்தாம்பாளையம் பழனிசாமி மாநாட்டுப் பந்தலில் திராவிடர் கழகக் கொடியை ஏற்றிவைத்து, திராவிடர் கழகத்தின் லட்சியம், தொண்டர்களை உருவாக்குதல் குறித்து சொற்பொழிவாற்றினார்.

மாநாட்டைத் திறந்து வைத்த குடந்தை முத்து தனபால், "ஐந்து, ஆறாம் வகுப்புகளில் ஆங்கில பாடத்தை நீக்கியது, திராவிடர்களுக்கு ஊறு செய்வதாகும். நம் பிள்ளைகள் அதிகம் பேர் ஆறாம் வகுப்புக்கு மேல் படிப்பதில்லை என்பதால், இந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும்" என்றார். அடுத்து எம்.கே.குகநாதன் வரவேற்புரையாற்ற, எஸ்.ஆர்.சுப்பிரமணியம் தலைமையேற்றார். ஆரிய- திராவிட பேதங்கள் குறித்து விரிவாக விளக்கிய எஸ்.ஆர்.சுப்பிரமணியம், "திராவிடர் கழகம் அகில இந்திய இயக்கமாக்கப்பட வேண்டும். அதற்காக எல்லா திராவிட மொழிகளிலும் ஆங்கிலத்திலும் தினசரிகள் நடத்த பெரியார் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்" என்றார்.

பின்னர் பெரியார், திராவிட நாட்டுப் படத்தைத் திறந்து வைத்து, நீண்டதொரு உரையாற்றினார். "தேசிய தோழர்கள் தங்கள் தியாகத்தைக் காட்டி, வேண்டுமானால், மந்திரிகள் ஆகலாம். ஆனால், திராவிடர் கழகமோ ஒருகாலத்தில் உலகம் முழுவதும் போற்றும் நிலையை அடையும் என்பது உறுதி. கொட்டகைக்கு தீ வைப்பதால், கொள்கையை ஒழித்துவிட முடியாது. திராவிடர் கழகத் தோழர்கள் சமுதாயத்தில் தங்களுக்குள்ள இழிநிலையை, தங்கள் வருங்கால சந்ததியர்களுக்கு வைக்காது, தங்கள் காலத்திலேயே அதை நீக்கிட ஆவன செய்ய வேண்டும்" என்றார்.

மதிய உணவுக்குப் பிறகு, மாலை 3.30 மணிக்கு மீண்டும் மாநாடு கூடியது. அப்போது தாளமுத்து, நடராசன் படங்களை திறந்து வைத்த ஏ.வி.பி.ஆசைத்தம்பி, "தாளமுத்து, நடராசன் போன்று நாட்டுக்கு உயிர் கொடுக்க துணிந்த தோழர்கள் நமக்கு பல்லாயிரம் தேவைப்படும். அவர்களை நினைவில் கொண்டு, இனத்தை இழிவில் இருந்து மீட்க நாம் வழி தேட வேண்டும். வருங்காலத்தில் எவ்விதத் தியாகத்துக்கும் நான் தயாராக இருக்கிறேன்" என்று ஆவேசமாகப் பேசினார். கைவல்யம் சாமி படத்தை நாவலர் நெடுஞ்செழியன் திறந்து வைத்தார்.

பின்னர், மாலை 7 மணிக்கு சேலம் சித்தையன் தலைமையில், பொது மாநாடு தொடங்கியது. அப்போது மாநாட்டுப் பந்தலில் கூடியிருந்தோர் எண்ணிக்கை சுமார் பத்தாயிரமாக அதிகரித்துவிட்டது. சேலம் சித்தையன், ஈ.வெ.கி.சம்பத் ஆகியோர் உரையாற்றிய பிறகு, மீண்டும் சுமார் 2 மணி நேரம் உரையாற்றினார் பெரியார். குறிப்பாக, கள்ளச்சந்தைப் பதுக்கலை ஒழித்து, நாட்டில் நிலவிய உணவுப் பஞ்சத்தை நீக்க அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் அவசியம் குறித்து பெரியார் விரிவாகப் பேசியிருந்தார்.

**...கூட்டம் திரளும்**

## தி.மு.க. மாநில கட்சியாக இருப்பது...

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.) என்கிற பெயரில், தமிழ்நாட்டில் அதிர்ச்சியளிக்கும் எண்ணிக்கையில் வாக்காளர்களை நீக்கியுள்ளது தேர்தல் ஆணையம். ஆனால், அதில் சூழ்ச்சி இருந்தால், அதையும் தி.மு.க முறியடிக்கும் என முகநூலில் பதிவிட்டுள்ளார் ஊடகவியலாளர் முரசொலி.

அவரது பதிவிலிருந்து...

"தமிழ்நாட்டுல 75 ஆயிரம் பூத்கள் இருக்கின்றன. தி.மு.க. பூத் ஏஜென்ட்ஸ் மட்டும் கிட்டத்தட்ட ஏழு லட்சம் பேர நியமிச்சிருக்காங்க. அம்புட்டு பேரோட டீடெயில்சும் 'மக்களுடன் ஸ்டாலின்' என்கிற ஆப்ல இருக்கு. அதாவது, நூறு ஓட்டுக்கு ஒரு பூத் ஏஜென்ட். 'ஓரணியில் தமிழ்நாடு'னு ஒவ்வொரு வீட்டுக்கும், தெருவுக்கும் போய் புதுசா தொண்டர்களை சேர்ப்பது, 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி'னு ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் உட்பட்ட மக்களை ஒன்று திரட்டி பிரச்சாரம் செய்வது, இதை எல்லாம் சரியாகப் பண்ணிருக்கோம்னு போட்டோ எடுத்து அந்த ஆப்ல அப்லோட் பண்ணணும்.

இந்த வேலைகளையெல்லாம் சரியா பண்றாங்களான்னு ஒன்றியம், பேரூர், பகுதி, கிளைன்னு இருக்குற பொறுப்பாளர்கள் சரி பார்க்கணும். இவுங்களோட டீடெயில்ஸும் இந்த ஆப்ல இருக்கும். இவுங்க யாராவது ஒழுங்கா வேலை பார்க்கலைன்னா தலைமை இடத்துல இருந்து, மாவட்டச் செயலாளருக்கு போன் பறக்கும். இப்போ எஸ்.ஐ.ஆர்.க்கு முன்னாடி இருந்த வாக்காளர் பட்டியல் இவுங்ககிட்ட இருக்கும். எஸ்.ஐ.ஆர்க்கு அப்புறமா வந்த வாக்காளர் பட்டியல் இவங்ககிட்ட வந்துரும். இரண்டையும் ஒப்பிட்டு யாரு யாரு பேரு மிஸ் ஆகியிருக்குனு கண்டுபிடிச்சு அவுங்கள வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் அடுத்த வேலைய ஆரம்பிக்கப் போறாங்க...

தி.மு.க.வின் பிரச்சாரம் தொகுதி வாரியாக இல்ல, பூத் வாரியாக தற்போது நடந்துகிட்டு இருக்கு. ஒவ்வொரு வாக்காளர் விவரங்களும் தி.மு.க. கையில இருக்கு. இதையெல்லாம் மீறி வாக்குத் திருட்டு நடந்தா, எதிர்காலத்துல அதையும் தி.மு.க. முறியடிச்சுரும். இப்போ தி.மு.க. வுக்கு வயது 75. அது 100 வயசு எட்டும்போது அப்போ என்ன டெக்னாலஜி வளர்ந்துருக்கோ அத வச்சு கட்சியை வளர்க்கும். இந்தியாவுல பா.ஜ.க.வுக்கு நேர் எதிர், கொள்கை எதிரி தி.மு.க. நேர் எதிர் ஓட்டரசியல் எதிரியும் தி.மு.க.தான். தி.மு.க ஒரு மாநில கட்சியாக இருப்பது, பா.ஜ.கவின் பெரும் அதிர்ஷ்டம்" எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### மாநாட்டில் தொண்டர் அணி மரியாதை!



கோவை அபு

2018-ஆம் ஆண்டு, ஈரோட்டில் நடைபெற்ற மண்டல மாநாட்டில் தொண்டர் அணிப் படையில் இணைந்து பணியாற்றினேன். அன்றைய செயல் தலைவர், இன்றைய நம் கழகத் தலைவர் அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா அவர்களும் மேடைக்கு வருகையில் தொண்டர் அணிப் படை மரியாதை செய்தோம். அன்று, தொண்டர் அணி மாவட்டத் துணை அமைப்பாளராக இருந்தேன். மாநாட்டுக்கு விரிவான பாதுகாப்புகளை தொண்டர் அணி சார்பில், ஏற்பாடு செய்து மாநாட்டை சிறப்பாக நடத்தினோம்.

**– கோவை அபு, மாவட்ட அமைப்பாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, கோவை மாநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com


# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

94

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## உலகமயமாகும் பெரியார்!




உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுள் குறிப்பிடத்தக்கது இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம். இதன் அங்கமாக விளங்கி பல்வேறு ஆய்வுத் தலைப்புகளில், ஆழமும் அகலமும் நிறைந்த புத்தகங்களை வெளிக் கொணர்கிறது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பதிப்பகம். அத்தகைய சிறப்புக்குரிய பதிப்பகம் மூலம், தந்தை பெரியார் பற்றிய நூல் இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியானது.

பல்வேறு ஆய்வறிஞர்களின் பங்களிப்பில், தந்தை பெரியாரின் வாழ்க்கை-சிந்தனை-செயல்பாடு ஆகியவை குறித்த கட்டுரைகள் அடங்கிய இந்நூலை பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி மற்றும் கார்த்திக் ராம் மனோகரன் ஆகியோர் தொகுத்துள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இங்கிலாந்து பயணத்தின்போது இந்நூல் வெளியிடப்பட்டது.

13 கட்டுரைகள் அடங்கிய இத்தொகுப்பு ஐந்தாக பகுக்கப்பட்டிருக்கிறது. பெரியாரின் அரசியலில் பெரும் தாக்கம் செலுத்திய வைக்கம் போராட்டமும், அம்பேத்கருடன் இணக்கமான கருத்தில் நின்று செயல்பட்ட பூனா ஒப்பந்தமும் முதல் பகுதியில் பேசப்பட்டுள்ளன.

அனைத்து சாமானிய-நலிவடைந்த அடையாளங்களையும் உள்ளடக்கி, அவர் கட்டமைத்த பார்ப்பனர் அல்லாதார்-திராவிடர்-தமிழர் என்ற பதங்களுக்கு, பின்னணியில் யாரையும் ஒடுக்காத சுயமரியாதைக் கருத்தியல் விளங்கியதை விக்னேஷ் கார்த்திக் கவனப்படுத்தி இருக்கிறார். தி.க-தி.மு.க. விலகியிருந்த காலத்தில் இருவருக்கும் இடையில் நிலவிய ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை சலபதி பதிவு செய்துள்ளார்.

பகுத்தறிவாளரான பெரியார் மதத்தை எப்படியானதாகப் பார்த்தார் காலந்தோறும் மதம் குறித்த அவரது பார்வை எவ்வாறு பரிணமித்தது என்பது குறித்து சுந்தர் காளி அவர்களும், பெரியாரின் ஆரிய-பார்ப்பன எதிர்ப்பு குறித்து, கார்த்திக் ராம் மனோகரன் அவர்களும், சிங்கப்பூரில் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் தாக்கம் குறித்தும், அதன் சமகால பொருத்தப்பாடு குறித்தும் டாரினி அழகிரிசாமி அவர்களும் மூன்றாம் பகுதியில் பதிவு செய்துள்ளனர்.

பெரியாரின் பெண் விடுதலை மற்றும் திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையாரின் பங்களிப்புகளை கார்த்திக் ராம் மனோகரன் மற்றும் விலாசினி ரமணி ஆகியோர் விளக்கியுள்ளனர். பெரியார் தன்னுடைய அரசியல் செயல்பாடுகளுக்காக, குறிப்பிட்ட சில தமிழ் இலக்கியங்களை கையாண்ட விதம் பற்றி ஆண்டனி அருள் வளன் அவர்களும், பெரியாரின் கருத்துகளை திரை மொழியில் பேசிய திராவிட சினிமா பற்றி சொர்ணவேல் ஈஸ்வரன் அவர்களும் கட்டுரை எழுதியுள்ளனர்.

கடைசி பகுதியில் சாதியச் சமூகத்தில் பொருளாதாரம் செலுத்தும் செல்வாக்கு குறித்து பெரியார் கொண்டிருந்த பார்வையை விஜயபாஸ்கர் அவர்களும், தமிழ் மக்கள் தங்கள் சுயமரியாதையை ஈன்றெடுக்க பெரியார் ஒரு பண்பாட்டு உளவியலாளராகப் பங்காற்றினார் என்று ராம் மகாலிங்கம் அவர்களும் தங்களது கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர்.

இந்நூலில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் தனி நூலாக விரித்து எழுதும் அளவுக்கு அடர்த்தியான கருத்துகளால் நிறைந்தவை. தமிழ்நாட்டில் பிறந்த ஒரு சிந்தனையாளர் உரிய தருணத்தில், இத்தகைய இடத்தை அடைந்துள்ளார். மறைந்து 50 ஆண்டுகள் கடந்திருந்தாலும் பெரியார் தனது சிந்தனைகள் மூலம் உலகமயமாகி வருகிறார் என்பதற்குச் சான்றாக கேம்பிரிட்ஜின் இத்தொகுப்பைக் கொள்ளலாம்.

**...வாசிப்போம்.**

## கருவூலம்

### பயிற்சி வகுப்புகள்!

1951-52 ஆண்டுகளிலேயே கழகத்தின் பிரச்சாரப் பயிற்சி வகுப்புகள் சேலம், தஞ்சை, திருச்சி, கோவை ஆகிய மாவட்டங்களில் நடைபெறலாயின. தி.மு.க. தொடங்கியபோதே, மதுரை மாவட்டம், அய்யம்பாளையத்தில் பெரிய தோட்டம் ஒன்றில் ஏழு நாள்கள் பயிற்சி வகுப்புகள், நாவலர் தலைமையில் நடைபெற்றுள்ளதாக, அவர் எழுதிய 'வாழ்வில் கண்டதும் கேட்டதும்' நூலில் குறிப்பிட்டுள்ளார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131